**இனிமையான குழந்தைகளே! தன்னை ஆத்மா என்று உணர்ந்து பிற ஆத்ம சகோதரர்களுடன் உரையாடல் செய்யுங்கள். இந்த பார்வையை உறுதியாக்கும் பொழுது பூதம் பிரவேசம் செய்யாது. யாரிடமாவது பூதம் தென்பட்டால் அவர்களிடமிருந்து விலகி விடுங்கள்.**

கேள்வி: தந்தையினுடையவர் ஆன பின்பும் ஆஸ்திகக் குழந்தைகள் மற்றும் நாஸ்திகக் குழந்தைகள் இருக்கின்றனர். எப்படி?

பதில்: யார் ஈஸ்வரிய நியமங்களைக் கடைபிடிக்கிறார்களோ, ஆத்ம அபிமானிக்கான முயற்சி செய்கிறார்களோ அவர்கள் தான் ஆஸ்திகர்கள். யார் ஈஸ்வரிய நியமங்களை மீறி, பூதங்களுக்கு வசமாகி தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொள்கிறார்களோ அவர்கள் தான் நாஸ்திகர்கள். 2) ஆஸ்திகக் குழந்தைகள் தேகம், தேக சம்பந்தங் களிலிருந்து புத்தியின் தொடர்பை நீக்கி தங்களுக்குள் சகோதரா சகோதரர்கள் என்று புரிந்து கொள்வர். நாஸ்திகக் குழந்தைகள் தேக அபிமானத்தில் இருப்பர்.

ஓம் சாந்தி. முதன் முதலில் தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார் - ஹே குழந்தைகளே! சிவபாபா நமது சுப்ரீம் தந்தையாகவும் இருக்கிறார், சுப்ரீம் ஆசிரியராகவும் இருக்கிறார், சுப்ரீம் சத்குருவாகவும் இருக்கிறார் என்பதை புத்தியில் சதா நினைவில் வைத்துக் கொள்ளவும். இது முதன் முதலில் புத்தியில் வர வேண்டும். எனது புத்தியில் வந்ததா? இல்லையா? என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள முடியும். ஒரு வேளை புத்தியில் வந்தது எனில் ஆஸ்திகர் களாக இருக்கிறீர்கள், வரவில்லையெனில் நாஸ்திகர்கள். மாணவர்களின் புத்தியில் ஆசிரியர் வந்திருக்கிறார் என்பது உடனேயே வர வேண்டும். வீட்டிலிருக்கும் பொழுது அதை மறந்து விடுகிறீர்கள். நமது சுப்ரீம் பாபா வந்திருக்கிறார் என்பதை மிகச் சிலர் மட்டும் தான் புரிந்திருக் கின்றனர். அவர் ஆசிரியராகவும் இருக்கிறார், மற்றும் திரும்பி அழைத்துச் செல்லும் சத்குரு வாகவும் இருக்கிறார். நினைவு வருவதன் மூலம் குஷியின் அளவு அதிகரிக்கும். இல்லையெனில் தனது துக்கமான உலகின் சீ சீ விசயங்களில், விதவிதமான எண்ணங்களில் அமர்ந்து கொண்டே இருக்கிறீர்கள். விநாசத்திற்கு எவ்வளவு காலம் இருக்கிறது? என்று பலர் குழந்தைகளிடம் கேட்கின்றனர். இது கேட்பதற்கான விசயம் கிடையாது என்று கூறுங்கள். எங்களுக்குப் புரிய வைப்பது யார்? என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். முதலில் தந்தையின் அறிமுகம் கொடுங்கள். பழக்கம் ஏற்பட்டிருந்தால் புரிய வைப்பீர்கள், இல்லையெனில் மறந்து விடுவீர்கள். தன்னை ஆத்மா என உணருங்கள் என்று தந்தை எவ்வளவு புரிய வைக்கின்றார்! மற்றவர்களை ஆத்ம திருஷ்டியுடன் பாருங்கள். ஆனால் அந்த பார்வை நிலைத்திருப்பது கிடையாது. ஒரு ரூபாயில் ஒரு அணா அளவிற்குக் கூட அமருவது கிடையாது. புத்தியில் நிலைத்திருப்பது கிடையாது. இது தந்தை சாபம் கொடுப்பதாக அர்த்தம் கிடையாது. ஞானம் மிக உயர்ந்தது என்று தந்தை புரிய வைக்கின்றார். இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. ஏழையிலிருந்து மகாராஜன் ஆகின்றனர். மகாராஜர்களாக ஆவது மிகச் சிலர் மட்டுமே. மற்றபடி ஏழைகளாக ஆவது வரிசைக்கிரமமாக ஆகின்றனர். கடைசி நம்பரில் வருபவர்களின் புத்தியில் எந்த விசயமும் நிலைத்திருக்க முடியாது. ஆக முதன் முதலில் யாருக்காவது புரிய

வைக்கிறீர்கள் எனில் சிவபாபாவின் 32 குணங்களின் சித்திரம் உருவாக்கப்பட்டதை வைத்துப் புரிய வைக்க வேண்டும். அதில் சுப்ரீம் தந்தை, சுப்ரீம் ஆசிரியர், சத்குரு என்று எழுதப்பட்டிருக்கிறது.

புரிய வைப்பவர் சுப்ரீம் தந்தை என்ற நம்பிக்கை முதலில் ஏற்படும் பொழுது பிறகு சந்தேகம் வராது. தந்தையைத் தவிர வேறு யாரும் ஸ்தாபனை செய்ய முடியாது. இங்கு ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை எப்பொழுது நீங்கள் புரிய வைக்கிறீர்களோ அப்பொழுது அவர்களது புத்தியில் வர வேண்டும் அதாவது இவர்களுக்குப் புரிய வைப்பது வேறு யாரோ இருக்கிறார்கள். இங்கு இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது என்று எந்த மனிதனும் கூற முடியாது. ஆக முதன் முதலில் தந்தையின் மீது நம்பிக்கை பக்காவாக (உறுதியாக) ஆக்க வேண்டும். நமக்கு பரமாத்ம தந்தை கற்பிக்கின்றார். இது எந்த மனிதனின் வழியும் கிடையாது. இது ஈஸ்வரிய வழியாகும். புது உலகம் கண்டிப்பாக தந்தையின் மூலம் தான் ஸ்தாபனை ஆகும். பழைய உலகின் விநாசம், இதுவும் தந்தையின் வேலையாகும். இந்த நம்பிக்கை ஏற்படாத வரை எப்படி ஏற்படும்? என்று கேட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆக முதன் முதலில் ஸ்ரீமத்தின் விசயத்தை புத்தியில் பதிய வைக்க வேண்டும். அப்பொழுது தான் மற்றதை புரிந்து கொள்ள முடியும். இல்லையெனில் மனித வழி என்று புரிந்து கொள்வர். ஒவ்வொரு மனிதனின் வழியும் தனிப்பட்டதாகும். மனித வழி ஒரே வழியாக இருக்க முடியாது. உங்களுக்கு வழி கூறக்கூடியவர் ஒரே ஒருவர் ஆவார். அவரது ஸ்ரீமத்படி விதிப்பூர்வமாக நடப்பதும் மிகக் கடினமாகும். ஆத்ம அபிமானியாக ஆகுங்கள் என்று தந்தை கூறுகின்றார். நாம் சகோதரன் சகோதரனிடம் உரையாடல் செய்து கொண்டிருக் கிறோம் என்று புரிந்து கொள்ளும் பொழுது பிறகு சண்டை சச்சரவுகள் ஏற்பட முடியாது. தேக அபிமானத்தில் வந்தால் புரிந்து கொள்ளுங்கள் நாஸ்திகர்கள். ஆத்ம அபிமானியாக இல்லை யெனில் அவர்கள் நாஸ்திகர்கள். ஆத்மா அபிமானி ஆகின்ற பொழுது ஆஸ்திகர்களாக ஆகிறீர்கள். தேக அபிமானம் அதிக நஷ்டம் ஏற்படுத்தக் கூடியது. சிறிது சண்டையிட்டுக் கொண்டாலும் புரிந்து கொள்ளுங்கள் நாஸ்திகர்கள். தந்தையை அறியவேயில்லை. கோபம் என்ற பூதம் இருந்தால் நாஸ்திகர்களாகத் தான் இருக்கின்றனர். தந்தையின் குழந்தைகளிடம் பூதம் எங்கிருந்து வந்தது! அவர்கள் ஆஸ்திகர்களாக இருக்க மாட்டார்கள். எனக்கு தந்தையிடத்தில் அதிக அன்பு இருக்கிறது என்று கூறலாம். ஆனால் ஈஸ்வரிய விதிமுறைக்குப் புறம்பாக பேசினால் அவர்கள் இராவண வம்சத்தைச் சேர்ந்தவர் என்று தான் புரிந்துக் கொள்ள வேண்டும். தேக அபிமானத்தில் இருக்கின்றனர். யாரிடத்திலாவது பூதத்தைப் பார்த்தால் அல்லது கெட்ட பார்வையோடு இருப்பதைப் பார்த்தால் ஒதுங்கி விட வேண்டும். பூதத்தின் முன் நின்றிருந்தால் பூதம் பிரவேசமாகி விடும். பூதம் பூதத்துடன் சண்டையிடும். பூதம் வந்து விட்டால் முற்றிலும் நாஸ்திகர் ஆகிவிடுவர். தேவதைகள் சர்வ குணங்கள் நிறைந்தவர்களாக இருப்பர், அந்த குணங்கள் இல்லை யெனில் நாஸ்திகர்கள். நாஸ்திகர்கள் ஆஸ்தி அடையமாட்டார்கள். சிறிதும் குறைகள் இருக்கக் கூடாது. இல்லையெனில் அதிக தண்டனை அடைந்து பிரஜையாக செல்ல வேண்டியிருக்கும். பூதத்திடமிருந்து தூர விலகியிருக்க வேண்டும். பூதத்தை எதிர் கொண்டால் பூதம் வந்து விடும். பூதத்தை ஒருபொழுதும் எதிர்கொள்ள மாட்டார்கள். அவர்களிடத்தில் அதிகமாகப் பேசக் கூடாது. தந்தை கூறுகின்றார் - இது பூதங்களின் உலகமாகும்.

பூதம் நீங்காத பொழுது தண்டனை அடைய வேண்டியிருக்கும். பதவியும் அடைய முடியாது. ஒரே ஒரு யுத்தம் தான். சிலர் ஏழையாக ஆகின்றனர், சிலர் இராஜாவாக ஆகின்றனர். இராஜாக்களின் உலகமாக இருந்தது, இப்பொழுது ஏழைகளின் உலகமாக இருக்கிறது. அனைவரிடத்திலும் பூதம் இருக்கிறது. பூதத்தை நீக்குவதற்கு முழுமையான முயற்சி செய்ய வேண்டும். பாபா முரளிகளில் மிகவும் புரிய வைக்கின்றார். வித விதமான சுபாவம் உடையவர்கள் இருக்கின்றனர், அதைப் பற்றி கேட்காதீர்கள்.

ஆக கண்காட்சிகளில் முதன் முதலில் தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். தந்தை எவ்வளவு அன்பானவராக இருக்கிறார்! அவர் நம்மை அவ்வாறு தேவதைகளாக ஆக்குகின்றார். மனிதனை தேவதையாக ஆக்கினார் ..... என்ற புகழும் இருக்கிறது. தேவதைகள் சத்யுகத்தில் இருந்தனர் எனில் கண்டிப்பாக அதற்கு முன் கலியுகம் இருந்தது. இந்த சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானமும் குழந்தைகளாக உங்களது புத்தியில் இப்பொழுது இருக்கிறது. அங்கு இந்த ஞானம் இந்த தேவதைகளிடம் இருக்காது. இப்பொழுது நீங்கள் ஞானம் நிறைந்தவர்களாக ஆகிறீர்கள், பிறகு பதவி கிடைத்ததும் ஞானத்தின் அவசியம் இல்லை. இவர் எல்லையற்ற தந்தையாவார், இவர் மூலம் உங்களுக்கு 21 பிறவிகளுக்கு சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது. ஆக இப்படிப்பட்ட தந்தையை எவ்வளவு நினைவு செய்ய வேண்டும்! பாபா சதா புரிய வைக்கின்றார் - சிவபாபா நமக்குப் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சதா நினையுங்கள். சிவபாபா இந்த இரதத்தின் மூலம் நமக்குக் கற்பிக்கின்றார். அவர் நமது தந்தை, ஆசிரியர், குருவாக இருக்கின்றார். இது எல்லையற்ற படிப்பாகும். முதலில் நாம் தாழ்ந்த புத்தி யுடையவர்களாக இருந்தோம் என்பதை நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். இந்தக் கல்லூரி பற்றி யாருக்கும் சிறிதும் தெரியாது. ஆகையால் புரிய வைக்கும் நேரத்தில் நல்ல முறையில் திரும்பத் திரும்ப அழுத்தமாகப் புரிய வைக்கவும். கிருஷ்ணருக்கான விசயமே கிடையாது. சிவபாபாவைத் தவிர கிருஷ்ணருக்கு எந்த சரித்திரமும் கிடையாது என்று தந்தை புரிய வைக்கின்றார். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கும் சரித்திரம் இருக்க முடியாது. சரித்திரம் ஒரே ஒருவருக்கும் மட்டுமே, அவர் தான் மனிதர்களை தேவதைகளாக ஆக்குகின்றார். உலகை சொர்க்கமாக ஆக்குகின்றார். நீங்கள் அந்த தந்தையின் ஸ்ரீமத்படி நடக்கிறீர்கள். தந்தையின் உதவியாளர்களாக இருக்கிறீர்கள். தந்தை இல்லையெனில் நீங்கள் எதுவும் செய்ய முடியாது. நீங்கள் இப்பொழுது ஒரு பைசாவிற்கும் பயன்படாத நிலையிலிருந்து தகுதி வாய்ந்தவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் அனைவரும் வரிசைக்கிரமமான முயற்சியின்படி அறிந்து கொண்டீர்கள். ஆக முதன் முதலானது தந்தையின் அறிமுகம் ஆகும். கிருஷ்ணர் சிறிய குழந்தை ஆவார். சத்யுகத்தில் அவரது எல்லையற்ற இராஜ்யம் இருந்தது. அவரது இராஜ்யத்தில் வேறு யாரும் கிடையாது. இப்பொழுது கலியுகமாகும், எவ்வளவு தர்மங்கள் உள்ளன! இந்த ஒரே ஒரு ஆதி சநாதன தேவி தேவதா தர்மம் எப்பொழுது ஸ்தாபனை ஆனது? என்பது யாருடைய புத்தியிலும் கிடையாது. குழந்தைகளாகிய உங்களது புத்தியிலும் வரிசைக் கிரமமாக இருக்கிறது. ஆக தந்தையின் மகிமையை மிக நல்ல முறையில் புரிய வைக்க வேண்டும். தந்தையின் மூலம் நமக்கு அறிமுகம் கிடைத்திருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். தந்தை கூறுகின்றார் - அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளலும் நான் தான். தன்னை ஆத்மா என்று உணருங்கள் மற்றும் என்னை

நினைவு செய்யுங்கள் என்று ஒவ்வொரு கல்பத்திலும் நான் குழந்தைகளாகிய உங்களுக்கு வழி காட்டுகிறேன். பிறகு ஆத்மா பதீதத்திலிருந்து பாவனமாக ஆகிவிடும். ஆத்ம அபிமானியாக ஆகுங்கள். மற்றவர் களையும் ஆத்மா என்று உணர்வதன் மூலம் உங்களது பார்வை கெட்டதாக ஆகாது. ஆத்மா தான் சரீரத்தின் மூலம் காரியங்கள் செய்கிறது - நான் ஆத்மா, இவரும் ஆத்மா - என்பதை உறுதி செய்ய வேண்டும். நாம் முதலில் 100 சதவிகிதம் பாவனமாக இருந்தோம், பிறகு பதீதமாக ஆகிவிட்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். பாபா வாருங்கள் என்று ஆத்மா தான் அழைக்கிறது. ஆத்மாவின் அபிமானம் உறுதியாக இருக்க வேண்டும், மேலும் மற்ற அனைத்து சம்பந்தங்களையும் மறந்து விட வேண்டும். ஆத்மாக்களாகிய நாம் இனிய வீட்டில் இருக்கக் கூடியவர்கள். இங்கு நடிப்பை நடிப்பதற்காக வந்திருக்கிறோம். இதையும் குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிந்து கொள்கிறீர்கள். உங்களிலும் வரிசைக்கிரமமாகத் தான் நினைவில் இருக்கிறது. பகவான் கற்பிக்கிறார் எனில் எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! பகவான் நமது தந்தையாகவும் இருக்கிறார், ஆசிரியராகவும் இருக்கிறார், சத்குருவாகவும் இருக்கிறார். நாம் அவரைத் தவிர வேறு யாரையும் நினைப்பது கிடையாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். தந்தை கூறுகின்றார் - தேகம் தேகத்தின் அனைத்து சம்பந்தங்களையும் விடுத்து என் ஒருவனை நினைவு செய்யுங்கள். நீங்கள் அனைவரும் சகோதரர் கள். சிலர் ஏற்றுக் கொள்கின்றனர், சிலர் ஏற்றுக் கொள்வது கிடையாது எனில் நாஸ்திகர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நாம் சிவபாபாவின் குழந்தைகள் எனில் பாவனம் ஆக வேண்டும். பாபா வந்து நம்மை பாவன உலகிற்கு எஜமானர்களாக ஆக்குங்கள் என்று தந்தையை அழைக்கிறோம். சத்யுகத்தில் பாவனம் ஆவதற்கான விசயமே கிடையாது. இவர் சிவபாபா, இவர் மூலம் புது உலகம் ஸ்தாபனை ஆகிறது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். விநாசம் எப்பொழுது ஏற்படும்? என்று கேட்டால் முதலில் இறைவனை புரிந்து கொள்ளுங்கள் என்று கூறுங்கள். இறைவனைப் புரிந்து கொள்ள வில்லையெனில் அடுத்த விசயம் புத்தியில் எப்படி வரும்! நாம் சத்திய தந்தையின் குழந்தைகள் சத்தியத்தைக் கூறுகிறோம். நாம் எந்த மனிதனின் குழந்தைகள் கிடையாது. நாம் சிவபாபாவின் குழந்தைகள். பகவானின் மகாவாக்கியம், யார் அனைத்து சகோதரர்களுக்கும் தந்தையாக இருக்கிறாரோ அவர் தான் பகவான் என்று கூறப்படு கின்றார். மனிதர்கள் தங்களை பகவான் என்று கூறிக் கொள்ள முடியாது. பகவான் நிராகார மானவர். அவர் தந்தை, ஆசிரியர், சத்குருவாக இருக்கின்றார். எந்த மனிதனும் தந்தை, ஆசிரியர், சத்குருவாக இருக்க முடியாது. எந்த மனிதனும் யாருக்கும் சத்கதி கொடுக்க முடியாது, பகவானாக இருக்க முடியாது.

பாபா பதீத பாவனாக இருக்கிறார். பதீதமாக ஆக்குவது இராவணன். மற்றபடி இவர்கள் அனைவரும் பக்தியின் குருமார்கள். யார் இங்கு வருகிறார்களோ அவர்கள் ஆஸ்திகர்களாக ஆகின்றனர் என்பதை நீங்கள் புரிந்திருக்கிறீர்கள். எல்லையற்ற தந்தையிடம் வந்து நம்பிக்கை செய்கிறீர்கள் - இவர் எனது தந்தை, ஆசிரியர், சத்குருவாக இருக்கிறார். எப்பொழுது முழுமையாக தெய்வீக குணங்கள் வந்து விடுகிறதோ அப்பொழுது யுத்தமும் ஆரம்பாகி விடும். நேரத்தின் அனுசாரமாக நீங்கள் தானே புரிந்து கொள்வீர்கள். இப்பொழுது நான் கர்மாதீத நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது கர்மாதீத நிலை எங்கு ஏற்பட்டிருக்கிறது? இப்பொழுது அதிக வேலை இருக்கிறது.

பலருக்கு செய்தி கொடுக்க வேண்டும். தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைவதற்கு அனைவருக்கும் உரிமை இருக்கிறது. இப்பொழுது யுத்தம் மிக ஜோராக ஏற்படும். பிறகு இந்த மருத்துவமனை, டாக்டர்கள் போன்ற எதுவும் இருக்காது. உங்களது ஆத்மா இந்த சரீரத்தின் மூலம் 84 பிறவிக்கான பாகம் நடிக்கிறது என்பதை தந்தை குழந்தைகளாகிய உங்கள் எதிரில் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். சிலருக்கு 70-80 பிறவிகள் இருக்கும். அனைவரும் செல்ல வேண்டும். விநாசம் ஏற்பட்டே ஆக வேண்டும். அசுத்த ஆத்மாவினால் செல்ல முடியாது. பாவனம் ஆவதற்கு தந்தையை அவசியம் நினைவு செய்ய வேண்டும். முயற்சி இருக்கிறது. 21 பிறவிகளுக்கு சொர்க்கவாசிகளாக ஆக வேண்டும். சிறிய விசயமா என்ன! இன்னார் சொர்க்கவாசி ஆகிவிட்டார் என்று மனிதர்கள் கூறி விடுகின்றனர். அடே, சொர்க்கம் எங்கு இருக்கிறது? எதுவும் புரிந்து கொள்வது கிடையாது. பகவான் நமக்குக் கற்பிக்கின்றார், உலகிற்கு எஜமானர்களாக ஆக்குகின்றார் என்ற மிகுந்த குஷி குழந்தைகளாகிய உங்களுக்குள் இருக்க வேண்டும். ஒன்று குஷி நிலையாக இருப்பது, மற்றொன்று அல்ப காலத்திற்கு இருப்பது. படிக்கவில்லை, கற்பிக்கவில்லை எனில் குஷி எப்படி ஏற்படும்? அசுர குணங்களை விரட்ட வேண்டும். தந்தை எவ்வளவு புரிய வைக்கின்றார்! கர்மக் கணக்கு எவ்வளவு இருக்கிறது! எதுவரை கர்மக் கணக்கு இருக்கிறதோ, இன்னும் கர்மாதீத் நிலை அடையவில்லை என்பதன் அடையாளம் இதுவாகும். இப்பொழுது முயற்சி செய்ய வேண்டும். மாயையின் எந்த புயலும் வரக் கூடாது. தந்தை நம்மை பல முறை மனிதனிலிருந்து தேவதையாக ஆக்கியிருக்கிறார் என்ற நம்பிக்கை குழந்தைகளிடம் இருக்கிறது. இது புத்தியில் வந்தாலும் ஆஹா! சௌபாக்கியம். இது எல்லையற்ற பெரிய பள்ளிக் கூடமாகும். அது எல்லைக்குட்பட்டது சிறியது. தந்தைக்கு மிகுந்த கருணை ஏற்படுகிறது, எப்படி புரிய வைப்பது - இதுவரை யாரிடமிருந்தும் பூதம் நீங்கவில்லை. உள்ளத்தில் அமருவதற்குப் பதிலாக கீழே விழுகின்றனர். சில சகோதரிகள் பலருக்கு நன்மை செய்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர். நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) எந்த காரியமும் ஈஸ்வரிய விதிமுறைக்குப் புறம்பாகச் செய்யக் கூடாது. யாரிடத்திலாவது பூதம் பிரவேசமாகியிருந்தால் அல்லது கெட்ட பார்வை இருந்தால் அவர்கள் எதிரிலிருந்து விலகி விட வேண்டும். அவர்களிடம் அதிகம் பேசக் கூடாது.

2) நிலையான குஷியுடன் இருப்பதற்கு படிப்பில் முழு கவனம் வைக்க வேண்டும். அசுர குணங்களை நீக்கி தெய்வீக குணங்களை தாரணை செய்து ஆஸ்திகர்களாக ஆக வேண்டும்.

வரதானம் : நிச்சயம் மற்றும் போதையின் ஆதாரத்தில் ஒவ்வொரு பிரச்சனையின் மீதும் வெற்றியை பலனாக அடையக் கூடிய வெற்றி சொரூபம் ஆகுக.

யோகா மூலம் இப்பொழுது அப்படிப்பட்ட வெற்றியை பலனாக அடையுங்கள் அதாவது குறையும் பிராப்தியின் அனுபவத்தை

ஏற்படுத்த வேண்டும். நிச்சயம் மற்றும் போதை ஒவ்வொரு பிரச்சனையிலும் வெற்றியாளராக ஆக்கி விடும். நாட்கள் செல்லச் செல்ல காய்ந்த ரொட்டியும் சாப்பிட வேண்டிய அளவிற்கு சோதனைகள் வரும். ஆனால் நிச்சயம், போதை மற்றும் யோகத்தில் வெற்றிக்கான சக்தி காய்ந்த ரொட்டியையும் சூடானதாக ஆக்கிவிடும். குழப்பம் ஏற்படுத்தாது. நீங்கள் வெற்றி சொரூபத்தின் பெருமையில் இருந்தீர்கள் எனில் யாரும் குழப்ப முடியாது. எந்த சாதனமாக இருந்தாலும் ஓய்வாக பயன்படுத்துங்கள், ஆனால் சரியான நேரத்தில் ஏமாற்றி விடக் கூடாது என்பதில் கவனமாக இருங்கள்.

சுலோகன்: நிமித்தமாகி யதார்த்த நடிப்பு நடித்தீர்கள் எனில் அனைவரின் சகயோகத்தின் உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும்.

அவ்யக்த அமைதியின் மூலம் டபுள் லைட் பரிஸ்தா ஸ்திதியின் அனுபவம் செய்யுங்கள்

எந்த ஒரு காரியத்திலும் புதுமை கண்டுபிடிப்பதற்கு ஒருநிலைப்படுத்துவது (ஏகாக்ரதா) அவசிய மாகும். லௌகீக உலகின் கண்டுபிடிப்பானாலும் சரி, அலௌகீக கண்டுபிடிப்பானாலும் சரி. ஒருநிலைப்படுத்துவது என்றால் ஒரே சங்கல்பத்தில் நிலைத்து விடுவதாகும். ஒரே ஈடுபாட்டில் மூழ்கியிருப்பதாகும், தனது அமைதி சொரூப ஸ்திதியில் நிலைத்து விடுவதாகும். இதனால் புத்தி அலைவது எளிதாகவே நின்று விடும். தேகம் மற்றும் தேக உலகம் எளிதாக மறந்து விடும் மற்றும் டபுள் லைட் பரிஸ்தா ஸ்திதி அனுபவம் ஏற்பட ஆரம்பித்து விடும்.